

## தடகள போட்டிகளில் 5 தங்கப்பதக்கம்:

# நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி மாணவருக்கு பாராட்டு

குழித்துறை, மார்ச்.2-

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் வணிகவியல் துறையில் இரண்டாம் ஆண்டு படித்து வரும் மாணவர் அகில்ராம். இவர் கடந்த மாதம் மாநில அளவில் நடைபெற்ற தடகள போட்டியில் 5 ஆயிரம் மீட்டர் மற்றும் பத்தாயிரம் மீட்டர் ஓட்ட பந்தயங்களில் வெற்றி பெற்று 2 தங்கப்பதக்கங்களை பெற்றார்.

மேலும் இவர் நெல்லை பல்கலைக்கழக அளவில் நடை பெற்ற தடகள போட்டியில் 5 ஆயிரம், 10 ஆயிரம் மீட்டர் ஓட்ட பந்தயங்கள் மற்றும் கிராஸ் கன்ட்ரி ஓட்டத்திலும் வெற்றி பெற்று மூன்று தங்க பதக்கங்களை பெற்றார். மாநில மற்றும் பல்கலைக்கழக அளவில் 5 தங்க பதக்கங்களை பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவர் அகில்ராமை கல்லூரி தாளாளர் வினோத்குமார், முதல்வர் பால்ராஜ் மற்றும் கல் லூரி நிர்வாகக் குழுவினர் பாராட்டினர்.